**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 06.02.2025

**அசல் வழக்கு எண் 182/ 2011**

**வா.சா.** 1 **- ஜெ.கே.நரசிம்மன் த/பெ. கிருஷ்ணசாமி**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

உங்கள் பிறந்த நாள் என்ன என்றால் **5 6 1970** ஆகும். **1961** ஆம் ஆண்டு செட்டில்மெண்ட் பத்திரம் தாக்கல் செய்துள்ளீர்கள் அது எழுதப்பட்ட போது நீங்கள் பிறக்கவில்லை என்றால் சரிதான். அதில் என்ன வாசகங்கள் உள்ளது என்பதை படித்து பார்ப்பீர்களா என்றால் தெரியாது. அந்த செட்டில்மெண்ட் யார் யாருக்கு எழுதியது என்றால் தெரியாது. உங்கள் தாத்தாவுக்கு யார் செட்டில்மெண்ட் எழுதி வைத்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது அவருக்கு எப்படி சொத்து கிடைத்தது என்கிற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு தெரியாத பட்சத்தில் உங்கள் தாத்தாவுக்கு எழுதிக் கொடுத்தவருக்கு சொத்து எப்படி வந்தது என்று வழக்கில் சொல்லி உள்ளீர்கள் அதனை எந்த அடிப்படையில் சொன்னீர்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கில் உள்ள சங்கதிகளை உங்கள் வழக்கறிஞருக்கு தெரிவித்தது யார் என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. ஆகவே நீங்கள் வழக்கு தயார் செய்ய வழக்கறிஞர் வீட்டுக்கு போகவில்லை என்றால் சென்றேன். வழக்கறிஞர் வீட்டுக்கு சென்ற நீங்கள் எதை கேட்டாலும் தெரியாது என்று கூறுவதற்கு என்ன காரணம் என்றால் தற்பொழுது தான் வழக்கறிஞர் வீட்டிற்கு சென்றேன். **2011** இல் இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் வழக்கு சொத்தினை வழக்கு போடுவதற்கு முன்போ பின்போ பார்த்ததுண்டா என்றால் பார்த்தது இல்லை. சாட்சியம் அளிப்பதற்கு முன்பு சென்று பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. தாவா சொத்து யார் வசம் உள்ளது என்கிற விவரம் உங்களால் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. வழக்கில் உள்ள சொத்து விவரத்தினை கொடுத்தது யார் என்றால் என் தாத்தா சொத்து என்று எனக்கு தெரியும். அதன் கதவு எண், சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவாசொத்தின் என்ன உள்ளது என்றால் ஒரு மாடிக் கொண்ட வீடு உள்ளது. உங்கள் தாத்தா காலத்தில் இருந்தது போல் வீடு உள்ளதா என்றால் அதை இடித்து கட்டி விட்டார்கள். எந்த அடிப்படையில் சொத்தில் பாகப்பிரிவினை கோருகிறீர்கள் என்றால் தாத்தா சொத்து என்கிற அடிப்படையில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

உங்கள் தாத்தா ராகவாச்சாரிக்கு பரம்பரை அடிப்படையில் சொத்து வரவில்லை செட்டில்மெண்ட் ஆவணம் வாயிலாக சொத்து கிடைத்தது என்றால் சரிதான். உங்கள் தந்தை ஜெ.கிருஷ்ணசாமி ஆகும். உங்கள் அப்பாவின் அம்மா பெயர் மங்கம்மாள் என்றால் சரிதான். ராகவாச்சாரிக்கும் மங்கம்மாளுக்கும் உங்கள் அப்பா கிருஷ்ணசாமி ஒரே மகன் என்றால் சரிதான். உங்கள் தாத்தா ராகவாச்சாரி **1983** இல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். தாத்தா காலமாகும் பொழுது ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தி வைத்தாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உங்கள் தாத்தா ராகவாச்சாரி காலமான பிறகு உங்கள் பாட்டி மங்கம்மாள் மற்றும் உங்கள் அப்பா கிருஷ்ணசாமி ஆகியோர் வாரிசு என்றால் சரிதான். உங்கள் பாட்டி மங்கம்மாள் **1992** இல் காலம் ஆகிவிட்டார் என்றால் சரிதான். ஆகவே ஒரே வாரிசு உங்கள் அப்பா என்று சொன்னால் சரிதான். உங்கள் தாத்தா ராகவாச்சாரியின் சொத்துதான் உங்கள் அப்பா கிருஷ்ணசாமிக்கு வந்தது என்று சொன்னால் சரிதான். உங்கள் அப்பா கிருஷ்ணசாமி அந்த சொத்தை வைத்திருக்கிறாரா அல்லது கிரயம் செய்து கொடுத்து விட்டாரா என்றால் விற்பனை செய்து விட்டார். உங்கள் அப்பா எப்போது சொத்தினை விற்றார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உங்கள் அப்பா **14 11 2006** சொத்தை விற்று விட்டார் அப்போது உங்களுக்கு பணம் ரூபாய் **75,000/-** கொடுத்தார் என்றால் சரிதான் ஆகவே அப்பொழுது உங்களுக்கு சொத்தினை விற்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படுகின்ற ரசீது நகல் நீங்கள் பணம் பெற்றது தான் என்றால் சரிதான் அது பி.சா.ஆ **1** ஆக குறியீடு செய்யப்படும். நான் கையொப்பம் போட்டது சரிதான் பணம் வங்கியில் டெபாசிட்டில் தூங்கிக் கொண்டிருக்கிறது. என் அப்பாவிற்கு இரண்டாவது மனைவி இருக்கிறார் அவரது மகளின் பெயரில் அது டெபாசிட்டில் உள்ளது. என் அப்பாவின் இரண்டாவது மனைவியின் மகள் தற்போது வெளிநாட்டில் உள்ளார் . உங்கள் அப்பாவிற்கு நான்கு மகன்கள் என்றால் நான்கு மகன்கள் ஒரு மகள் உள்ளார்கள். உங்கள் அம்மா பெயர் கௌசல்யா. உங்கள் அப்பா சொத்தினை கிரயம் செய்யும்பொழுது நான்கு பிள்ளைகளுக்கும் தல ரூபாய் **75,000/-** கொடுத்துள்ளார். அதனை எழுதி கையொப்பம் பெற்றுள்ளார் அதேபோல் அவரது மனைவி அவர்களுக்கு ரூபாய் ஒரு லட்சம் கொடுத்துள்ளார் உங்கள் சகோதரி மரகதவல்லி என்கிற சுமதி என்பவருக்கு ரூபாய் **40,000/-** கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கிரையம் கொடுத்ததற்கான பாக்கி தொகை ரூபாய் **3,50,000/-** தொகையினை அவருடைய

நான்கு பிள்ளைகளுக்கும் தலா ரூபாய் **50,000/-** கொடுத்துள்ளார். வழக்கில் உள்ள முதல் ஐட்ட சொத்தானது **2006** இல் விற்பனை செய்யப்பட்ட அன்றே உங்களுக்கு விவரம் தெரியும் பாகமும் பிரித்து பணம் கொடுத்து விட்டார்கள். **2006** இல் கிரயம் கொடுக்கப்பட்டது தெரிந்த வம்பு வழக்கு போட்டு உள்ளீர்கள் என்றால் சரியில்லை. இரண்டாவது ஐட்டம் சொத்து **13** மேட்டுப்பாளையம் தெரு உங்களுடைய அப்பாவின் உடைய தாத்தாவினுடைய சொந்த சொத்தா அல்லது டிரஸ்ட் சொத்தா என்றால் எனக்கு தெரியாது அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்டதா என்றால் தெரியாது அந்த சொத்து தற்போது உங்களிடம் இல்லை என்றால் சரிதான். இரண்டாவது பிரதிவாதிக்கு சொத்து எழுதி வைத்த விவரங்கள் எப்பொழுது தெரிந்து கொண்டீர்கள் என் அப்பா இரண்டாவது மனைவியின் மகளின் பெயரில் எழுதி பாட்டு பாட்டாக விற்று விட்டார் என்று எனக்கு தெரியும். வாதி தரப்பு சான்றாவணம் **4** வாயிலாக **2006** லேயே சொத்து விற்கப்பட்டது தெரிந்து கொண்டு இரண்டு ஆண்டுகளுக்கு பின்னிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்க காரணம் என்ன என்றால் ஞாபகம் இல்லை. வாதி தரப்பு சான்றாகணும் இரண்டில் குறிப்பிட்டுள்ள சொத்தானது வழக்கின் முதல் அயிட்ட சொத்தின் மொத்த சொத்தா அல்லது ஒரு பகுதியா என்றால் தெரியாது. இரண்டாவது ஐட்ட சொத்து உங்களுக்கு சொந்தமான சொத்து இல்லை முதல் அயிட்ட சொத்து உங்கள் அப்பாவிற்கு வாரிசு என்கிற அடிப்படையில் கிடைத்தது ஆகையால் உங்கள் அப்பாவின் சொந்த சொத்து அதை அவர் கிரயம் செய்தால் நீங்கள் எந்த கேள்வியும் கேட்க முடியாது. உங்கள் மீது கொண்ட அன்பினால் பாசத்தினாலும் உங்களுக்கு அவர் பணம் கொடுத்தாரே தவிர பாகம் என்கிற அடிப்படையில் உரிமை என் அடிப்படையில் உங்களுக்கு பணம் கொடுக்கவில்லை ஆகையினால் நீங்கள் வழக்கு சொத்தில் பாகம் கோரமுடியாது வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை. வழக்கில் வழக்கு மூலம் கிடையாது என்றால் சரி இல்லை. வழக்கு தள்ளுப்படி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Type written by the Typist in Open Court to my dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T. Thirumal
Additional Subordinate Judge,

Kancheepuram.